# நாஞ்சில் மலர்

NANCHIL MALAR

மலர் : 10 இதழ் :10 நாஞ்சில் மலர் ஆகஸ்ட் 2020
VOLUME : 10 ISSUE: 10 NANCHIL MALAR AUGUST 2020
விலை : ₹20/-வருடச் சந்தா: ₹.200/- Annual Subscription ₹ 200/-

## வாழ்த்தி வணங்குகிறோம்!.



தமிழ்த் தொண்டாற்றிச் சாதனை புரிந்துவரும்
நாஞ்சில் நாட்டின் நல்முத்துக்களில் ஒருவர்
முனைவர் தாயம்மாள் அறவாணன்
அவர்கள்!

KNOWLEDGE EMPOWERS

Rajalakshmi™ Institutions

RAJALAKSHMI ENGINEERING COLLEGE
An AUTONOMOUS Institution
Affiliated to ANNA UNIVERSITY, Chennai

rit RAJALAKSHMI INSTITUTE OF TECHNOLOGY

RSB RAJALAKSHMI SCHOOL OF BUSINESS
THE BOUTIQUE B-SCHOOL

RAJALAKSHMI SCHOOL OF ARCHITECTURE

RAJALAKSHMI COLLEGE OF NURSING

RAJALAKSHMI VIDYASHRAM MATRIC. HR. SEC. SCHOOL

**Administrative Office:**

69, New Avadi Road, Kilpauk, Chennai - 600 010
Phone: +91-44-26442472, 26461316, 26460124
Fax: +91-44-26445151
email: admin@rajalakshmi.edu.in

www.rajalakshmi.org

23 years OF ACADEMIC EXCELLENCE

# நாஞ்சில் மலர்

மலர் : 10 இதழ் : 10 ஆகஸ்ட்2020

VOLUME : 10 ISSUE : 10 NANCHIL MALAR AUGUST 2020

-----------------------------------------------------------

நிறுவனர் - பதிப்பாசிரியர்: கி. தானப்பன்

ஆசிரியர் : கி. கண்ணன் துணையாசிரியர்: மு. கோபி

இதழ் வடிவமைப்பு மற்றும் அச்சிடுபவர் : ப. இளங்கோ

-----------------------------------------------------------

ஆசிரியர் குழு: பெ .சாஸ்தாங்குட்டி பிள்ளை, என்.பொன்னுசுவாமி , ' நாஞ்சில் கொண்டான்' எஸ். சரவணன், முனைவர். சி. உதயகுமார், P. வேலப்பன், நா.சேகர்

-----------------------------------------------------------

ஒருங்கிணைப்பாளர்கள்: தியாகி. தெ. வே. பகவதிப் பெருமாள் , சுந்தர் சுப்பிரமணியம், எஸ். கிருஷ்ண பிள்ளை

-----------------------------------------------------------

ஆலோசகர்கள் : பி . யோகீசுவரன், மோகன் காந்திராமன்

நிர்வாக இயக்குனர் : A. பூதலிங்கம் பிள்ளை,

*******************************************************

நாஞ்சில் மலருக்கு சந்தா அனுப்ப விரும்புபவர்கள் காசோலை அல்லது வரைவோலையில் 'Nanchil Malar' எனக் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்! வருட சந்தா ரூ.200/-

முகவரி: கி.தானப்பன், பிளாட் எண்: 25, கதவு எண்:10, 2-வது தெரு, அருள் நகர், மாதவரம் பால்பண்ணை, சென்னை.600 051,

Ph: 044 25552073, 98402 59614 , kt.appan@yahoo.co.in

-----------------------------------------------------------

நாஞ்சில் மலருக்கு சந்தா, நன்கொடை, NEFT மூலம் அனுப்ப விரும்புபவர்கள் , NANCHIL MALAR, Current A/C No. 3329010100 35895, ( IFSC: UBIN 0533297) UNION BANK OF INDIA, MADHAVARAM, CHENNAI 600110 .என்ற முகவரிக்கு அனுப்பி விட்டுத் தங்கள் முகவரியைத் தெரிவிக்கவும்.

-----------------------------------------------------------

நாஞ்சில் மலரில் வாசக அன்பர்களால் எழுதப் பெற்று வெளிவரும் கட்டுரைகள், கருத்துக்கள், தகவல்கள் அனைத்தும் அவர்களது சொந்தக் கருத்துக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - ஆசிரியர்

# சாதனை புரிந்த நாஞ்சில் நாட்டு வேளாளர்கள்



## முனைவர் தாயம்மாள் அறவாணன்

உலகம் உள்ள வரை நிலைத்த புகழ் படைத்த மணியான கவிதை களைப் படைத்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,

எந்தக் கேள்வி கேட்டாலும் உடனுக்குடன் விடையளிக்கும் வியப்பிற்குரிய அவதான அறிஞர் தசாவதானி ஆறுமுகம் பிள்ளை,

நாட்டினர் எல்லோரும் கொண்டாடும் வரலாற்றறிஞர் கே.கே.பிள்ளை,

வெள்ளைக்காரர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவின் சுதந்திரத்திற்காகச் சிறை சென்ற குமரிமாவட்டப் பொதுவுடமைப் போராளியும் இலக்கிய வித்தகரும், எழுத்திலும், பேச்சிலும் வல்லாண்மை மிக்க அறிஞருமான ப.ஜீவானந்தம்,

திருகாந்திராமன் பிள்ளை, சி.பி. இளங்கோ, பி.எஸ்.மணி, தியாகி சிவன்பிள்ளை, ஆங்கிலேயர்களைக் கதிகலங்க வைத்த எம்டன் ஜெய்ஹிந்த் செண்பகராமன்,

மகாத்மா காந்தியிடம் தன் கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்துச் சுதந்திரப் போராட்டத்திற்கு நிதியளித்த அழகம்மாள் காந்திராமன்,

திருவிதாங்கூரின் தமிழ்ப் பகுதிகளைத் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பாடுபட்ட நாகர்கோவில் மாவீரர் நாகலிங்கம், தேரூர் டி.எஸ். இராமசாமி, அப்போதைய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பி. மகாதேவன் பிள்ளை, இன்னும் ஏராளமான தியாகிகள்,

பொருளாதார நிபுணர் டாக்டர் ப. நடராஜன்

மைலாடி, தேரூர், என்று பல ஊர்களின் சிறப்பிற்குரிய மருத்துவ மாமேதைகள், 'தொண்டன்' என்ற பத்திரிகையை நடத்தித் தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றிய தொண்டர் குழாம் ஆறுமுகம் பிள்ளை, பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரை,

சிவஞான போத விளக்க வித்தகர், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் வித்வானாகத் திகழ்ந்த சேந்தன்புதூர் பகவதிப் பெருமாள் பிள்ளை,

நடிப்பென்ற கலைச்செல்வத்தால் சிரிக்கவும், சிந்திக்கவும் தூண்டிய கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், நாடக மேதைகளாகத் திகழ்ந்த

டி.கே.எஸ்.சகோதரர்கள்,மற்றும் பல நாடக, சினிமாக் கலைஞர்கள்.

முதன் முதல் டி.இ.ஒ. என்ற பெருமை மிகு கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய டி.இ.ஒ. சிவன் பிள்ளை,

செல்லும் இடமெல்லாம் வெல்லும் இடமாகக் கல்வி நிறுவனங்களை நிறுவிய முதல் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் வடசேரி ஐயம் பெருமாள் சுப்பிரமணியம், அவர் வழி வந்த அகஸ்தியலிங்கம் என்ற துணை வேந்தர்,

எம்.எல்.சி. என்ற மேலவையை அலங்கரித்த தலைவர்கள் நீலநாராயணன், சங்கரலிங்கம்.

தொல்காப்பியம் நன்னூல் இலக்கண அறிஞர் இந்துக்கல்லூரி எஸ்.சுப்பிரமணியம், குமரிமாவட்ட எல்லைப் போராட்டங்களை வரலாறாக வடித்த அறிஞர் புத்தேரிப் பேராசிரியர் பி.யோகீசுவரன்,

திருவள்ளுவரையும், தொல்காப்பியரையும் குமரி மாவட்டச் சொந்தக்காரர்கள் என ஆய்வின் மூலம் நிரூபித்த ஆய்வுக் களஞ்சியம் ஆசிரியர் டாக்டர் எஸ். பத்மனாபன்,

உலகப்புகழ் பெற்ற பிரமோஸ் ஏவுகணை விஞ்ஞானி பத்மபூஷண் ஆ.சிவதாணு பிள்ளை.

கோளரங்க விஞ்ஞானியாகப் பணியாற்றிய டாக்டர் எஸ். ஐயம் பெருமாள்

நாஞ்சில் நாட்டுப் பெண்மணியாம் முதல் நாவலாசிரியர் விசாலம்,

சாகித்ய அகாடமி விருது பெற்றவரும் கதைகள், கட்டுரைகள், நாவல்கள் என எழுதிக் குவித்தவருமான நாஞ்சில் நாடன்,

'காக்கைச்சிறகினிலே' என்ற பத்திரிகையை நடத்திய நாவலாசிரியர் மா. அரங்கநாதன்

திரைப்படக் கதைகள் எழுதிப் புகழ் சேர்த்த அழகன் பெருமாள், கௌசிக், திரைப்பட இயக்குநர் மோகன் காந்திராமன்,

இன்றும் நாஞ்சில் மலரில் கதைகள், கட்டுரைகள் எழுதிவரும் அருள்நிதி பகவதி மோதிலால், சிறுகதை எழுத்தாளர் மு. கோபி, முனைவர் ஜெயஸ்ரீ, சுதந்திரப் போராட்ட வீரர்களின் வரலாறுகளை எழுதிவரும் ஜெய் ஹிந்த் செண்பகராமனின் பேரன் பொ.சேது சேஷன், நாஞ்சில் மலர் ஆசிரியர் கி. தானப்பன்,

கல்வித்துறையில் சி.ஈ.ஒ. என்ற உயர் பதவியை வகித்த, சிறந்த தலைமை ஆசிரியர் விருது பெற்ற பொன்னம்மாள், ஆன்மீகக் கட்டுரைகள் எழுதும் கிருஷ்ணம்மாள் இராமச்சந்திரன்,

பீகார் மாநிலத் தலைமைச் செயலாளராக விளங்கும் திரு மோகன் ஐ.ஏ.எஸ்., திருவனந்தபுரம் வேளாண் விஞ்ஞானி முனைவர் மோதிலால் நேரு, திருவனந்தபுரம் மருத்துவர் மார்த்தாண்ட பிள்ளை,

நீதியரசர் மகாதேவன் பிள்ளை,

ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமையப்பாடுபட்டு, தன் நண்பர்களுடனும், உலக மக்கள் அனைவரது பொருள் பங்களிப் போடும் தமிழுக்கு இருக்கை அமைத்ததோடு மட்டுமன்றி கனடாவின் டொரண்டோ பல்கலைக் கழகத்திலும் தமிழ் இருக்கை நிறுவி சாதனை படைத்த முனைவர் மு. ஆறுமுகம்,

சிறந்த மருத்துவர் விருது பெற்ற டாக்டர் ஆ. நாகராஜன்.

தமிழ் ஆய்வறிஞர் பேரா.அ.கா.பெருமாள்,

எம்.எல்.ஏ.,அமைச்சர் எனப் பதவியில் இருந்தவர்கள், இருப்பவர்கள்.

மேலும் பல பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள், வங்கி அதிகாரிகள், மற்றும் கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வகிப்பவர்கள், தொழிலதிபர்கள் எனத் தங்களது அயராத உழைப்பால் உயர்ந்த சாதனைச் செம்மல்கள் நாஞ்சில் நாட்டில் தோன்றியவர்கள்.!

சொந்தங்களே!, மேற்கண்டோர் சென்ற பாதையை எண்ணிப் பார்ப்போம். அவர்களின் உயர்வை அடைய நாம் கைக்கொள்ளும் முறையை எண்ணுவோம்! .

நம் நேரத்தை நல்வழியில் செலவு செய்வோம்! உரக்கச் சிந்திப்போம் ! அடுத்தவர்களை மதிப்போம். மனம் திறந்து பாராட்டுவோம், காலங்கருதுவோம். வம்பளப்பை நிறுத்துவோம், சரியாகக் கணிப்போம், தொண்டு செய்வோம், தடைகளைத் தாண்டுவோம். கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் பிறரை அவமதிப்புச் செய்யாமல் இருப்போம்.

தொலைபேசியிலும், தொலைக்காட்சியிலும், ஃபேஸ் புக்கிலும் நாம் நேரத்தைக் கொலை செய்யோம் !

நீதி நெறி விளக்கத்தில் ஒரு பாடல் உண்டு.

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பது ஒன்று உண்டு - பிறர் பிறர்
சீரி எல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல் - நீதி நெறி விளக்கம் 19

இதன் பொருள்: மற்றவர்களுடைய நல்ல செயல்களைக் கண்டறிந்து பாராட்ட வேண்டும். அன்னோரிடம் உள்ள குறைகளை ஒதுக்கி வைத்து விட்டு அவரைப் பற்றித் தாழ்ந்தவற்றை எவரிடமும் சொல்லக்கூடாது. அப்படி நடந்தால் நம்மை எல்லோரும் பாராட்டுவர் என்பதாகும்.

பெரியாரைப் பிழையாமை, அடக்கம் உடைமை முதலான அதிகாரங்களில் திருவள்ளுவர் உரைக்கும் பொன்னான கருத்துக்கள் நம் உள்ளத்தில் உறையட்டும்!.

நம் ஒவ்வொரு செயலும் நம் இனத்தைச்சாரும்!. ஆக நன்றாக உழைத்து உயர்வை அடைய எண்ணுவோம்!.

பாறைகளைத் தகர்த்துப் பாதையாக்கிய பெருமக்கள் வழியில் நடையிடுவோம்!

---



**அன்புடையீர்,**

திருக்கடையூர் திருக்கோவிலில் நடத்தப்படும் அனைத்து விதமான பரிஹார ஹோமங்கள், சஷ்டி அப்தபூர்த்தி, சதாபிஷேகம், ஆயுஷ்ஹோமம் ஆகியவைகள் மிகவும் சிறப்பான முறையில் செய்விக்கப்படும்.தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **மா. ஞானப்பிரகாசம் பிள்ளை** (தேவஸ்தானப்பணி), **த/பெ. மாசிலாமணிப் பிள்ளை** 3/62, தேவஸ்தானக் குடியிருப்பு , தெற்குவீதி, திருக்கடையூர் (Po), தரங்கம்பாடி (Tk) நாகப்பட்டினம் மாவட்டம் - 609 311
அலை பேசி: 9487033370, 9488220937, 8870251787

# சைவசித்தாந்தம் :- ஓர் அறிமுகம்



*"சித்தாந்த இரத்தினம்"*
*முனைவர் எஸ்.மோதிலால் நேரு*

*சென்ற இதழ்த் தொடர்ச்சி.....*

**சமயம் என்றால் என்ன?**

சமைத்தல் அல்லது பக்குவப்படுத்துவது என்பது அதன் எளிய பொருள். மக்களை இறை உணர்வு உடையவர்களாகவும், நல்லொழுக்கம் உடையவர்களாகவும், பண்பாளர்களாகவும், கருணை உடையவர்களாகவும், உயர்த்தி அவர்களுக்கு ஒரு குறிக்கோள் அல்லது இலட்சியத்தை கொடுக்கிறது சமயம். இந்த சமயங்கள் அவரவர் சிறப்பு கொள்கையில் வேறுபடுகிறது. அதாவது அடிப்படை கொள்கைகள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகளான சரியை கிரியை யோக முறைகள் முதலியவற்றில் வேறுபாடு என்றாலும், பொதுவான கொள்கையான வாய்மை, இரக்கம், எல்லா உயிரிடத்தும் அன்பு, மனம், மொழி, மெய் கட்டுப்பாட்டில் வைத்தல் போன்ற நல்லொழுக்கங்களை கடைபிடிக்க சொல்வதில் எல்லா சமயங்களும் பொதுவாக இருக்கிறது. அதாவது செல்லும் வழி வெவ்வேறாக இருந்தாலும் சென்று அடைய நினைக்கும் இடம் பொதுவாகத்தான் இருக்கிறது.

**சைவ சமயம் என்றால் என்ன?**

இதற்கு எளிமையாக, சைவ சமயம் சிவத்தோடு சம்பந்தம் உடையது என்று சொல்லலாம். சைவ சமயம் என்றால் செம்மை + நெறி = செந்நெறி அதாவது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது என்னும் பொருளை உணர்த்துகிறது. அதுமட்டுமல்ல சிவ வழிபாடு உள்ளிட்ட நெறிமுறைகளை கொண்டதுமாகும். பல ஆராய்ச்சியாளர்களும் சிவ வழிபாடு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது என்று உறுதிப்படுத்துகிறார்கள். இது சைவத்தின் பழமையை விளக்கும். இந்த சைவக் கொள்கைகள் பழந்தமிழ் இலக்கியங்களிலும், பழமையான சமய நூல்களிலும் காணமுடிகிறது. பதிமூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய

மெய்கண்டார் என்ற சமயக்குரவர், சிவஞானபோதம் என்ற நூலில் சைவ சித்தாந்தம் முழுமையாக வரையறுக்கப்பட்ட தத்துவக்கொள்கையாக நூல் வடிவம் பெற்றுள்ளது. மெய்கண்டாரும், அவரது வழியில் நின்ற அருளாளர்களும் அருளிய மெய்கண்ட சாத்திரங்கள் என்ற 14 நூல்கள் சைவசித்தாந்தக் கொள்கைகளை சிறப்பாக விளக்குகின்றன. நம் இறை வழிபாட்டு நெறிக்கு சமயக் குரவர்களான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் உள்ளிட்ட 27 அருளாளர்கள் அருளிய பன்னிரு திருமுறைகள் துணையாக நிற்கின்றது.

**சைவ சமயத்தின் சிறப்பு:**

உயிர்கள் படிப்படியாக முன்னேறும் இயல்பை உடையது என்பதும், உயிர்கள் விவித நிலைகளில் அடையும் உணர்வுகளும், அனுபவங்களின் அடிப்படையில் தெளிவு பெற்று, உயர்ந்து, மெய்யறிவு பெறுகிறது என்பதும், ஒவ்வொரு பிறப்பிலும் உயிர்கள் புதிய, புதிய **நுகர்வுகளையும்**, புதிய அனுபவங்களையும், தெளிவையும் பெறுகிறது எனவும் கூறுவது சைவசமயத்தின் சிறப்பாகும்.

இதை திருவள்ளுவர்

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

என்று கூறுகிறார். தாயுமானவர் கூட சைவ சமயமே சமயம் என்று அதன் சிறப்பை போற்றுகின்றார்.

**சைவ சமயத்தின் நோக்கம் என்ன?**

உயிர்களின் மாசை நீக்கி, பக்குவப்படுத்தி, சிவமாம் தன்மை அடையச் செய்வதே, சைவ சமயத்தின் அடிப்படை கொள்கை. சைவ சமயம் மிகப்பழமையானது எந்த ஆண்டு துவங்கியது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அந்த அளவுக்கு பழமையானது. சைவத்தில் சிவன், கடவுள் என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகிறது. கடவுள் என்ற சொல் இறைவனின் அன்பை குறிப்பது.

அதாவது 'கட' என்பது எல்லா உயிர்களையும், உலகங்களையும் கடந்து நின்று இயக்குபவன் என்ற பொருளையும், 'உள்' என்பது ஒவ்வொரு பொருளின் உள்ளிருந்து அது அதுவாய், அவற்றுடன் கலந்து நின்று, அவற்றின் இருப்புக்கும், அவை இயங்குவதற்கும்

துணையாய் இருப்பவன் என்ற பொருளைக் குறிக்கின்றது. பொருள்களை கடந்து நிற்பது கடவுளின் சிறப்பியல்பு. அவற்றுடன் கலந்து நிற்பது பொது இயல்பு என்றும் நமது சைவ சமயம் கூறுகிறது. கடவுள் என்ற சொல் தொல்காப்பியம் முதல், பல நூல்களில் கையாளப்படும் மிகப் பழமையான சொல். சங்க இலக்கியங்களில் "சிவம்" என்ற சொல் நேரிடையாக பயன்படுத்தப்படவில்லை, என்றாலும் அந்த இலக்கியங்கள் கூறும் இறை இலக்கணத்தைக் கொண்டு சங்க இலக்கியங்கள் சிவபெருமானைக் குறித்தே பேசுகின்றன என்றுபுரிய முடியும். "சிவ" என்ற சொல்லில் உள்ள "சி" என்ற எழுத்து இறைவனின் கடந்து நிற்கும் இயல்பையும், "வ" என்ற எழுத்து இறைவனின் கலந்து நிற்கும் இயல்பையும் குறிப்பதால். கடவுள் என்ற சொல்லுக்கு சிவம் என்பதே பொருளாகும். சைவ சமயத்தவர்களை பொறுத்தவரை, கடவுள் என்பது பரம்பொருள், அந்தப் பரம்பொருளே சிவன். சைவ சித்தாந்த நூலான திருமந்திரத்தில் இந்த இரு சொற்களும் பயன்படுத்தப்பட்டு அதன் பொருளை நன்றாக விளங்குகிறது.

**ஒழிந்தேன் பிறவி, உறவென்னும் பாசம்**
**கழிந்தேன் கடவுளும், நானும் ஒன்றானேன்**
**அழிந்தாங்கு இனிவரும் மார்க்கமும் வேண்டேன்**
**செழுஞ்சார்புடை சிவனைக் கண்டேனே**

திருமூலர் கி.மு. இரண்டாயிரத்துக்கும், மூவாயிரத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தார் என்று பன்னிரு திருமுறை வரலாறு நூலில் பேராசிரியர் கா.வெள்ளைவாரணர் கூறுகிறார்.

தமிழில் நான்மறைகள் கூறும் கருத்துக்களை திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், முதலிய நூல்கள் கூறுகின்றன என்ற உண்மையை ஔவையார் தனது நல்வழி, என்ற நூலில் இவ்வாறு கூறுகிறார்.

**தேவர் குறளும், திருநான் மறைமுடிவும்**
**மூவர் தமிழும், முனிமொழியும் - கோவை**
**திருவாசகமும், திருமூலர் சொல்லும்**
**ஒருவாசகமே என்றுணர்.**

### இந்திய தத்துவ ஞானத்தில் சைவசமய தத்துவம்:

இந்திய தத்துவ ஞானம் நம்மை சரியாக சிந்திப்பதற்கு மட்டுமின்றி, முறையாக வாழ்வதற்கும் வழிகாட்டுகிறது. கொள்கை அளவில் மட்டுமல்லாமல், வாழ்க்கையோடு இணைந்து நிற்பது இந்திய தத்துவத்தின் சிறப்பு. ஆன்மாக்கள் அனுபவிக்கும் துன்பத்தை கண்டு, அதன் காரணத்தை அறிந்து, அந்த துன்பத்தை போக்க வழி காணும்

நோக்கத்தில் பிறந்தது இந்திய தத்துவ ஞானம். அதில் மிகப் பழமையானது சைவ சமய தத்துவம். இதற்கு முன்பு தோன்றிய தத்துவ கொள்கைகளின் குறைகளை எடுத்துக்கூறி எவராலும் மறுக்க இயலாத தத்துவ கொள்கையை தந்ததால் சைவ தத்துவக் கொள்கை சித்தாந்தம் என வழங்கப்படுகிறது. சித்தாந்தம் என்பது முடிந்த முடிவு என்று பொருள்படும். இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சமயம் சித்தாந்த சைவம் என அழைக்கப்படுகிறது.

அடுத்த கட்டுரையில் சைவசித்தாந்தம் கூறும் இறைவன், உயிர், தளை ஆகிய மூன்று நித்தியப் பொருள்களையும், தமிழில் இருந்த நான்மறைகள், சைவ சமய பன்னிரு திருமுறைகள், சமயக்குரவர்கள் குறித்தும் பார்ப்போம் . (தொடரும்)

---

## முனைவர் பி. யோகீசுவரன்



**என் எண்ண ஓட்டத்தில் பழைய நினைவுகள்**

**சென்ற இதழ்த் தொடர்ச்சி.....**

**வரலாற்று வல்லுநர் கே.கே. பிள்ளை**

கே.கே.பிள்ளை இளமை முதலே படிப்பில் ஆர்வமும் முயற்சியும் ஒருங்கே கொண்டவராக இருந்தார். முதுநிலை பட்டம் பெற்ற பின்னரும் சரித்திர புத்தகங்களை நுண்ணிய கண்ணோட்டத்துடன் படித்து வந்தார். அதனால் சரித்திர ஆய்வில் அவர் மனம் ஈடுபாடு கொண்டிருந்தது.

ஆங்கிலப்பள்ளியிலும் கல்லூரியிலும் படித்த நிலையில் அவருக்கு ஆங்கிலப்புலமை வெகு விரைவாக கூடி அமைந்தது. மேலும் தாய்மொழியோடு மலையாளமும் ஓரளவிற்கு சமஸ்கிருதமும் கற்றிருந்தார்.

கே.கே. பிள்ளையின் குடும்பத்தார் இறைபக்தி நிறைந்தவர்கள். உள்ளூர் கோயில்களில் நாளும் சென்று வழிபடுதல் அவர்கள் இயல்பு. ஆளூர் அண்மையிலுள்ள குமார கோயிலுக்கு வெள்ளிக்கிழமை தோறும் சென்று முருகனை வணங்குவர். குறிப்பாக மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை குமார கோவிலுக்குச் செல்வதைத் தவிர்த்திட மாட்டார்கள். அதுபோல்

அவர்கள் சென்று இறைவழிபாடு செய்வது சுசீந்திரத்தில் கோயில் கொண்டிருக்கும் தாணுமாலயன் கோவிலாகும். அங்கு நடைபெறும் திருவிழாக்கள் மற்றுமுள்ள விசேட நாட்களில் சுசீந்திரம் கோயிலுக்குச் செல்லுதலைத் தங்கள் ‘கடமை’யாகக் கொண்டிருந்தனர் எனக்கூற முடியும். தாணுமாலையன் கோயிலுக்குப் பலமுறை சென்று வந்ததால் அத்தெய்வத்தின்பால் கே.கே.பிள்ளைக்கு ஓர் ஈர்ப்பு இருந்தது என்றே சொல்லலாம். ஆய்வுக்கண்ணோட்டமும் அதற்கான காலமும் நெருங்கி வந்த நிலையில் அவர் சுசீந்திரம் கோயிலைத்தான் ஆய்வுப் பொருளாகக் கொண்டார்.

ஓர் ஆய்வாளருக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருளில் ஈடுபாடும் அவ்வாறே அப்பொருளின்பால் நுட்பமான பார்வையும் இருத்தல் வேண்டும் என்பர். ஆய்வாளரை இயக்கும் சக்திகள் அவை எனக்கூறலாம். கே.கே.பிள்ளைக்கு சுசீந்திரம் கோயில்பால் இவ்விரு கூறுகளும் பொருந்தி நின்றன.

கோயில் பற்றிய ஆய்வு என்பது கோயில் கொண்டிருக்கும் தெய்வத்தினைக் குறித்த செய்திகள். கோயில் கட்டமைப்பு, கோயில் அமைந்திருக்கும் ஊர், சுற்று வட்டாரம், கோயிலைக் கட்டிய அரசர்கள் அல்லது பெருமக்கள், கோயிலில் நாளும் நடைபெறும் பூஜைகள், திருவிழாக்கள், கோயிலில் பதிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுக்கள், கோயில் சுவர்களில் பொருத்தப்பட்டிருக்கும் சிலைகள் மற்றும் வரைவுகள் அவை குறித்த இதிகாச புராணச் செய்திகள் இன்னும் பலவான தகவல்களை நுண்நோக்கில் கண்டறிவது ஆய்வாளரின் தவிர்க்க முடியாத செயற்பாடுகள். தன் சிந்தனையும் செயலும் ஆய்வுப் பொருளோடு ஒன்றி நிற்கிற அளவில் ஆய்வு வரைவு அறிவுலகில் நிலைபேறு கொண்டு நிற்கும்.

சுசீந்திரம் கோயிலில் ஏறத்தாழ முந்நூறுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலான கல்வெட்டுக்கள் தமிழிலும் ஒரு சில சமஸ்கிருதத்திலும், மலையாளத்திலும் ஆனவை. கோயில் பற்றிய செய்திகளையும் பல புள்ளி விவரங்களையும் கூறும் அக்கல்வெட்டுக்களை உற்று நோக்கி அவற்றைக் குறிப்பெடுத்துக்கொண்டு காலவரையறையில்

படித்தறிதல் ஆய்வாளரின் இன்றியாமையாத கடமை.

சுசீந்திரம் கோயிலில் உள்ள தமிழ்க் கல்வெட்டுக்கள் கூட்டெழுத்துக்களால் ஆனவை. அக்கூட்டெழுத்து வாசகங்களைப் படித்தறிதல் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் ஏலாத ஒன்று. அதற்கான பயிற்சியும், முயற்சியும் உடையாருக்கே அது சாலும். கே.கே.பிள்ளைக்கு அக்கல்வெட்டுக்களிலுள்ள கூட்டெழுத்து வாசகங்களைப் படித்துணர்த்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இசைந்தார். அவர் சாசனம் மற்றும் சரித்திர ஆராய்ச்சியிலும் ஈடுபாடு உடையவர் என்பது இங்கு அறிய வேண்டிய செய்தியாகும்.

கே.கே.பிள்ளை தன் ஆய்வுக்களமான கோயிலுக்கு வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் சென்று ஆய்வு செய்ய வேண்டும். அதற்காகச் சுசீந்திரம் ஊரில் ஒரு வாடகை வீட்டை எடுத்திருந்தார். கவிமணி பல நாட்கள் கே.கே.பிள்ளையுடன் தங்கி, கோயிலுக்குச் சென்று வட்டெழுத்துக் கல்வெட்டுக்களைப் படித்துக்காட்டினார். தான் அறிந்த செய்திகளையும் கவிமணி ஆய்வாளருக்கு அறிவுறுத்தினார். கே.கே.பிள்ளை இடையறா உழைப்பால் ஆய்வேட்டைத் தயார் செய்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்தார்.

சென்னைப் பல்கலைக்கழகம் 1946-ஆம் ஆண்டு, கே.கே.பிள்ளைக்கு D.Lit., (Doctor of Literature) என்ற பட்டத்தை வழங்கியது. அந்த ஆய்வேட்டைச் சென்னையிலுள்ள கலாசேத்திரா என்ற பேரமைப்பு 1953-ஆம் ஆண்டு வெளியிட்டது.

அந்த ஆய்வேட்டை கவிமணி தேசிக விநாயகம்பிள்ளைக்குக் காணிக்கையாக்குவதாக கே.கே.பிள்ளை பதிவு செய்திருந்தார். கே.கே.பிள்ளை நாகர்கோயில் வரும்போதெல்லாம் கவிமணியைச் சந்தித்து உரையாடிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

கே.கே.பிள்ளை கவிமணியைக் காணவரும் பொழுது சிலநாட்கள் அண்டையிலுள்ள எங்கள் வீட்டிற்கும் வருவார். அதில் ஒரு சில நாட்கள் அவருக்கு பிடித்தமான அசைவ உணவைச் சமைத்து மகிழ்வுடன் அண்ணனுக்கு என் அம்மா பரிமாறுவர். வராத அண்ணன் வந்திருக்கிறார் என்ற மனக்கிளர்ச்சியோடு அம்மா மகிழ்ந்த காட்சியானது இன்னும் என்னால் நினைவு கூற முடிகிறது.

1954-ஆம் ஆண்டு படுத்த படுக்கையாய்க் கிடந்த கவிமணி,

ஆகஸ்ட் மாதம் **திருவிதாங்கூர்** தமிழர் போராட்டத்தில் தமிழர் சுட்டு வீழ்த்தப்பட்ட செய்தியை அறிந்து அவர் பெருந்துயர் கொண்டார். அவர் உடல்நிலை மோசமடைந்தது. பெருமக்கள் பலர் வந்து பார்த்துச்சென்றனர். செய்தியறிந்த கே.கே.பிள்ளை சென்னையிலிருந்து புத்தேரிக்கு வந்து கவிமணியைப் பார்த்தார். கால் மணிநேரம் அவர் பக்கம் அமர்ந்து விட்டு எங்கள் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது நான் இன்டர் மீடியட் படித்துக் கொண்டிருந்தேன் என்னிடம் ‘நன்றாகப்படி’ எனச்சொல்லிவிட்டு புறப்பட்டுவிட்டார். ஒரு கப் காபி கூட அருந்தவில்லை. கவிமணியின் நிலை கண்டு வருந்தியதால் கண்கள் கலங்கியிருந்தன. நன்றியறிதல் உள்ளத்தோடு அவர் தோன்றினார்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து (மகேந்திரகிரி) கடலை நோக்கி ஓடிவரும் பழையாறு, நாஞ்சில் நாட்டில் சில ஊர்களைத் தாண்டி நாகர்கோவில் நகர்ப்புறமுள்ள கோட்டாற்றுப் பக்கத்தைக் கடந்து சுசீந்திரம் வழியாகச்சென்று கடலை அடைகிறது. சுசீந்திரத்தில் ஆற்றின் தெற்குத்திசையில் அரை கிலோ மீட்டருக்கும் குறைவான தொலையில் தாணுமாலயன் கோயில் இருக்கிறது. சுசீந்திரத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலையில் இந்தியாவின் தெற்குமுனையான கன்னியாகுமரி காணக்கிடக்கிறது.

கன்னியாகுமரியின் தெற்கே குமரிக்கண்டம் (Lameria) ஒன்று இருந்ததாகவும் அது கடல் கொந்தளிப்பால் கடலுள் மூழ்கிவிட்டதாகவும் சிலப்பதிகாரம் முதலாய இலக்கியங்கள் எடுத்து மொழிந்துள்ளன. அக்கண்டம் பற்றிய செய்தியினை சுசீந்திரம் கோயில் ஆய்வேடு குறிப்பிட்டுக் காட்டுகிறது. சுசீந்திரத்தை மையப்பகுதியாகக் கொண்ட நாஞ்சில் நாட்டின் கிடப்பையும் இந்த ஆய்வேடு புலப்படுத்துகிறது.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு சில நூற்றாண்டுகளையும், பிறப்பின் பின் ஒருசில நூற்றாண்டுகளையும் சங்க காலம் என்பர். அச்சங்க காலத்தில் நாஞ்சில் பொருநன் என்ற சிற்றரசன் நாஞ்சில் நாட்டை ஆண்டு வந்தான் என்பதைப் புற நானூறு கூறுகிறது. அந்த அரசனே நாஞ்சில் வள்ளுவன் என ஔவை துரைசாமிப்பிள்ளை தன் உரையில் கூறுகின்றார். இருவரும்

வெவ்வேறானவர் எனக் கருதுவோரையும் பார்க்கின்றோம்.

நாஞ்சில் நாடு பழங்காலத்தில் நெடு நாட்களாக பாண்டியர் ஆட்சியில் தான் இருந்தது. நாஞ்சில் நாட்டைக் கைப்பற்ற சேர அரசர்கள் மற்றும் பாண்டியர்கள் முயன்று போர் முகத்தில் வெற்றி பெற்றுள்ள செய்திகளும் உண்டு. சோழ அரசர்களும் தங்கள் எல்லை குமரிவரை விரிவு பெறவேண்டும் எனக்கொண்டு தங்கள் ஆதிக்கத்தை நிறுவிய வரலாறும் உண்டு.

பழங்காலப்பாண்டியர் போலவே பிற்காலப் பாண்டியர்களும் நாஞ்சில் நாட்டைத் தம் வசம் கொண்டிருந்தனர். பாண்டியர் குல அரசர்கள் வரிசையில் சேந்தன் அரிகேசரி மாறவர்மன் கோச்சடையான் போன்ற பேரரசர்கள் ஆட்சிக்காலத்தில் நாஞ்சில் நாடு அவர்களின் ஆட்சிக்கு அடங்கிய பகுதியாகவே விளங்கியது. கோச்சடையான் ரணதீரன் என்ற சிறப்புப் பெயருடன் கி.பி.9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதயில் அரசு நடத்தினான். அக்கோச்சடையான் குறித்து வேள்விக்குழ செப்பேடு கூறுவதை, கே.கே.பிள்ளை இந்த ஆய்வேட்டில் பதிவு செய்துள்ளார்.

இப்பாண்டிய அரசர்கள் பரம்பரையில் வந்த ஸ்ரீமார ஸ்ரீ வல்லப்பாண்டியன் நாஞ்சில் நாட்டின் பொருட்டு சேர அரசருடன் கடும் போர் செய்து வெற்றி பெற்றான். ஆயினும் இறுதியில் பாண்டியன் வீர நாராயண சடையன் காலத்தில் வீழ்ச்சியடைந்தனர். சில காலத்திற்கு பின் பராந்தகப்பாண்டியன் மீண்டும் நாஞ்சில் நாட்டைக் கைப்பற்றினான். அம் மன்னன் மதுரை முதல் கன்னியாகுமரி வரையுள்ள நிலப்பகுதியைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான்.

சோழர்களும் நாஞ்சில் நாட்டின் மீது படை எடுத்த வரலாறும் உண்டு. கி.பி.985 ஆம் ஆண்டு வாக்கில் ராஜ ராஜ சோழன் என்ற பேரரசன் நாஞ்சில் நாட்டைக் கைப்பற்றினான். இந்த மாமன்னனின் பத்தாம் ஆண்டு ஆட்சியின் வெளிப்பாடாகக் கல்வெட்டு ஒன்று சுசீந்திரம் கோயிலில் கிடைத்துள்ளது. அக்கோயிலில் நிர்வாகத்தில் ஏற்பட்ட சிக்கலை ராஜ ராஜன் முன் வந்து தீர்த்து வைத்தான் என அக்கல்வெட்டு கூறுகிறது. ராஜ ராஜ சோழனின் மகன் ராஜேந்திரனும் தந்தையைப் போலவே மாவீரனாய்த் துலங்கினான். அவனும் நாஞ்சில் நாட்டில் தன் ஆளுமையை நிலை

*நாட்டினான். இவ்வரசன் குறித்த கல்வெட்டுக்கள் நாஞ்சில் நாட்டில் பல இடங்களில் காணப்படுகின்றன. குறிப்பாகச் சுசீந்திரம் கோயிலிலும் ராஜேந்திரன் குறித்த கல்வெட்டுக்கள் காணக்கிடக்கின்றன. அச்சோழன் மரபில் வந்த அதி ராஜேந்திரன் நாஞ்சில் நாட்டைக் கைப்பற்றி ஆண்டான் என அறிந்து கொள்ள முடிகிறது. அவன் கல்வெட்டு ஒன்றில் சுசீந்திரம் ஊரினை சுந்தரச்சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டது.*

*கேரளவர்மன் என்ற வேணாட்டு அரசன் நாஞ்சில் நாட்டைக் கைப்பற்றி ஆட்சி நடத்தியபோது சுசீந்திரம் கோயிலை வீரகேரளச்சதுர்வேதி மங்கலம் எனப்பெயர் சூட்டியுள்ளான். வேணாட்டு பரம்பரையில் வந்த சேர உதயமார்த்தாண்டவர்மர், சுசீந்திரம் கோயிலில் தன் திருப்பணியாகச் சபா மண்டபத்தைக் கட்டியுள்ளார். விதிலா என்ற மன்னனால் கோபுரம் ஆக்கப்பெற்றச் செய்தியைக் கூறுகிறது. கிறிஸ்து பிறந்த 1145 ஆம் ஆண்டு சுசீந்திரம் கோபுரம் வடிவமைக்கப்பட்டதான செய்தியைச் சொல்கிறது. மற்றொன்று கோத்த கேரள வர்மா என்ற அரசர் மேற்படி விதிலா மாமன்னரின் ஆணைக்கு ஏற்ப, அரசுக்கு வரும் வருமானத்தின் ஒரு பகுதியைச் சுசீந்திரம் கோயிலுக்கு சூரிய சந்திரன் உள்ளவரை வழங்கிட வேண்டும் எனக் கூறுகிறது. (தொடரும்)*

---

## இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காமா அம்மையார்

**(தொகுப்பு: ஜெய்ஹிந்த் செண்பகராமன் அவர்களின் பேரன் பொ. சேதுசேஷன்) சென்ற இதழ்த் தொடர்ச்சி......**



*இவ்வாறு, அந்த காலகட்டத்தில், சர்வார்க்கரும் காமா அம்மையாரும் இந்திய சுதந்திரத்திற்கு ஆதரவு தேடும் விதமாக, அப்போது, அயர்லாந்து விடுதலை வீரர்களிடம் தொடர்பு கொண்டனர். மேலும், அமெரிக்காவில் நியுயார்க்* (Newyork) *நகரிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'காலிக் அமெரிக்கன்*

*(Gaelic American) என்ற புரட்சிப் பத்திரிக்கையில், உலக அடிமைத்தனத்தை விடுவிப்பதற்கான, பல கட்டுரைகள் காமா அம்மையாரும், சர்வார்க்கரும் எழுதி அந்தக் கட்டுரைகள், ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலி, ரஷ்யன், போர்க்சுகீஸ், மொழிகளில், மொழி பெயர்க்கப்பட்டு அந்நாடுகளில் புரட்சி தலைவர்களின் பாராட்டைப் பெற்றது.*

*மேலும், அவர்களால், தோற்றுவிக்கப்பட்ட, "அபிநவ்பாரத்" இயக்க அங்கத்தினர்கள் எல்லோரும் சர்வார்க்கர், அறிவுரை படி இந்த புரட்சி எண்ணங்கள் கொண்டவர்களாகிய தாங்கள் இந்த பிரிட்டிஷ் ஏகாதித்தியத்தை எதிர்த்து நடத்தும் இந்த போராட்டம், ஒன்று எங்கள் 'சாவில்' முடியும் அல்லது எங்கள் வெற்றியில் முடியும் என்று உறுதி மொழி எடுத்துக்கொண்டார்கள் மற்றும் அவர்கள் தினமும் இந்தியா இல்லத்தில் இரவு தூங்கச் செல்லும் முன் கீழ்கண்ட பிராத்தனையைத் தவறாமல் செய்து வந்தார்கள்.*

*"ஒரே இறைவன், ஒரே தேசம், ஒரே மொழி,*
*ஒரே இனம், ஒரே வாழ்க்கை, ஒரே நம்பிக்கை"*

*இதில் என்ன வேடிக்கை என்றால், அந்த இந்திய இல்லத்திற்கு பல மொழி பேசும், மாகாணத்திலிருந்து மாணவர்கள் (தமிழ் நாட்டிலிருந்து வந்த வ.வே.அ.அய்யர் உட்பட) வந்து தங்கி படித்து வந்ததால், அவர்கள் பேசும் மொழி ஏதும் புரியாமல், இந்திய இல்லத்தை நோட்டமிட வந்த இங்கிலாந்தின் பெயர் போன, துப்பறியும் நிறுவனமான "ஸ்காட்லாந்து யார்டு" (Scotland Yard) பலமுறை ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளது.*

*இதன் இடையே ஸ்யாம்ஜி தன்னுடைய பத்திரிகையான. 'இந்தியன் சோஷியலாஜிஸ்ட்'டில் (Indian Sociologist) 1907ஆம் ஆண்டு ஜூன் மாத இதழில் 'பிரிட்டிஷ் அரசாங்கம் தன் அதிகார மமதையில் 'லாலா லஜ்பத்ராய்' அவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட செய்தி வெளியிட்டிருந்தார். இதை தொடர்ந்து அதே இதழில் (Mother of Indian) தமது காமா அம்மையாரை தம் "இந்திய புரட்சித்தாய்" என்று குறிப்பிட்டு அவர் இந்திய மக்களுக்கு எழுதிய கடிதத்தை வெளியிட்டிருந்தார். அதில்*

*உண்மையான தேசபக்தி கொண்டு நமது தேசத்திற்காக உழைத்துக் கொண்டிருந்த 'திரு.லஜ்பத்ராய்' அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த கொடுமையை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் கேள்வியுற்றும் தங்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள். இந்திய மக்கள் 'ஒன்று மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அடிமைத்தனத்தில் வாழ்வதைவிட மக்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக அழிந்து போகலாம்' என்று ஆரம்பித்துள்ளார்.*

*மேலும் இந்தியா, பெர்ஸியா, அரேபியா ஆகிய நாடுகளில் பெருமையாகப் பேசப்படும், நம்முடைய நாகரீகத்தை பேச்சளவில் வைத்துக்கொண்டு இப்போது அடிமைகளாக வாழ்வது எதற்காக? வீரமிக்க, ராஜபுத்திரர்கள், சீக்கியர்கள், பதானியர்கள். கூர்க்காக்கள், நாட்டுப்பற்று மிக்க, மராட்டியர்கள், வங்காளியர்கள், துடிப்புள்ள பார்ஸீ மக்கள், தைரியமுள்ள முகமதியர்கள், கடைசியாக மிதவாதிகளான ஜைனமத்தினர் மற்றும் பொறுமைக்கு பெயர்போன இந்து மதத்தில் வீர மகன்களாக பிறந்த நீங்கள் எல்லோரும் ஏன் உங்களில் உள்ள வீரத்தை வெளி கொண்டு வராமல், மூலைகளில் முடங்கி கிடக்கிறீர்கள்? உடனே தடைகளை உடைத்தெறிந்து வெளிவந்து, இந்த சுதந்திர நாட்டின், விடுதலை காற்றை எல்லோரும் சமமாக சுவாசியுங்கள்."*

*"சகோதர சகோதரிகளே! இந்த மக்கள் சுதந்திரத்திற்கான போர் புரிந்து, கிழக்கிந்திய மக்களும், மேற்கிந்திய மக்களுக்கு பாடம் புகட்ட முடியும் என்பதை இந்த உலகம் உணரச் செய்யுங்கள். என்னை விட்டால், அந்த சிறைக் கதவுகளை உடைத்தெறிந்து. 'லஜ்பத்ராய்' அவர்களை வெளி கொணர்ந்து சுதந்திரக் காற்றை அவர் சுவாசிக்கச் செய்வேன். இந்திய இளைஞர்களே! கொதித்து எழுங்கள். நம்முடைய சுதந்திரத்தை நாம், போராடி பெற வேண்டும், பிச்சை எடுத்தல்ல. நம் வீரத் தலைவர்களை, தம் தாய் நாட்டுக்குப் பலி கொடுத்து விடாதீர்கள்.*

*"நாம் எல்லோரும் ஒன்று படுவோம் 30 கோடி மக்களாகிய நாம், ஒன்று திரண்டு, லஜ்பத்ராய்' அவர்களைப்போல போராடினால்*

*நம், எல்லோரையும் சிறையில் அடைக்க இந்த ஆங்கிலேய அரசு எத்தனை கோட்டைகளையும், சிறைச்சாலைகளும், கட்ட முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள் (அன்று 30 கோடி ஜனத்தொகை இன்று 133 கோடியாக பெருகியுள்ளோம்.) நண்பர்களே, நீங்கள் அனைவரும், 'ஒத்துழையாமை இயக்கத்தின் அறிவுரைப்படி. இந்த 'ராட்சஸ அரசுக்கு' எந்த ஆதரவையும் இன்று முதல் அளிக்காதீர்கள். எல்லாவிதத் தொடர்பையும் அறுத்து எறியுங்கள். தினமும் ஓர் ஆயிரம் பேர், தங்கள் அரசாங்க வேலைகளை 'ராஜிநாமா' செய்யுங்கள்.*

*இவ்வாறு நம் 'காமா அம்மையார்" கோடிட்டு காட்டிய 'ஒத்துழையாமை' யைத்தான், காந்திஜி அவர்கள் 10 வருடங்கள் கழித்து அதாவது நவம்பர் மாதம் 1917 ஆம் ஆண்டு இந்தியாவில் பெரும் அளவில், 'ஒத்துமையாமை இயக்கத்தை' ஆரம்பித்து. ஆங்கில அரசை எதிர்ப்பதில் தீவிரம் காட்டினார். இவ்வாறு நமது, 'இந்திய புரட்சித்தாய்' (The Mother of the Revolution) காமா அம்மையார் பத்து வருடங்கள் கழித்து ஒரு இந்திய தந்தை (Father of Nation) (காந்திஜி) உருவாகுவதற்கு வழிவகுத்தார் என்று உறுதியாக பதிவு செய்யலாம்.*

*இப்போது 'அனைத்துலக சமூகநல காங்கிரஸ்' என்ற இயக்கத்தைப் பற்றி தெரிந்துக்கொள்வோம். இந்த அமைப்பு 1889 ஆம் ஆண்டு பல ஐரோப்பிய அறிஞர்களால் உலகப் பொது சமூக நன்மைகளான, 'காலனி ஆதிக்க ஒழிப்பு, இராணுவ பலம் குறைப்பு, பெண் விடுதலை, தொழிலாளர் சங்கங்கள் அமைப்பு போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்காக துவக்கப்பட்டது. இதன் முதல் மாநாடு 1890 ஆம் ஆண்டு பாரீஸ் நகரில் (பிரான்ஸ்) நடந்தது. இரண்டாம் மாநாடு 1904 ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் (Amsterdam) நகரில் (நெதர்லாந்து நாடு) 1907ஆம் ஆண்டு நடந்தது. பல எதிர்ப்புகளிடையே, மூன்றாம் மாநாடு ஜெர்மனி நாட்டில், ஸ்டட்ஹார்ட் (Stuttgart) என்ற இடத்தில் 1907ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 18 ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த*

*காலக்கட்டத்தில் சர்வார்க்கர், பல ஐரோப்பிய சமூக தலைவர்களுடன் நல் உறவில் இருந்தமையால், சுதேசி இந்தியா சார்பாக, அவரை இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, இந்த கூட்ட அமைப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் சர்வார்க்கர் நமது காமா அம்மையாரும், 'பாரிஸ்டர். சுர்தார்சிங் ரானா' அவர்களும் தான் தகுதியானவர்கள் என்று அறிவித்து அவர்களுக்கு அமைப்பாளர்களால், 'அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் ஏதோ காரணத்தால், ரானா அவர்களுக்கு பதிலாக 'வீரேந்தர்நாத் சடோபாத்யாயா' காமா அம்மையாருடன் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.*

*சர்வார்க்கர் இந்த கூட்டத்தில் நேரிடையாக கலந்து கொள்ளா விட்டாலும் அவருடைய பங்களிப்பு 100% சதவிகிதமாகும். ஆம், அவர் காமா அம்மையாருக்குப் பலவிதமான ஆலோசனைகள் கூறியதோடு, அந்த கூட்டத்தில் 'இந்திய சுதந்திரத்திற்கான தீர்மானம் (Resolution) ஒன்றும் நிறவேற்றப்பட வேண்டும் என்பதோடு, அதை வடிவமைத்தும் கொடுத்தார். அந்த தீர்மானத்தை பின் கூட்ட நிகழ்வுகளை விவரிக்கும்போது விளக்கமாக எடுத்துரைக்கிறேன். இந்த கூட்டத்தில் (Conference) கலந்து கொண்ட நாடுகளின் பட்டியலை கீழே காண்போம்.*

*ஆஸ்திரியா : அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் விக்டர் அட்லர் (Victor Adler) இரண்டு பிரமுகர்களுடன் கலந்து கொண்டார்.*

*பெல்ஜியம் : அந்நாட்டின் தொழிலாளர் கட்சி தலைவர் 'வண்டர்வெல்டே' (Vandervelde) கலந்து கொண்டார்.*

*பிரான்ஸ் : பிரபல சமூகநலத் தொண்டர் மற்றும் பத்திரிகையாளர் 'ஜீல்ஸ் கஸ்டே' (Jules Guesde) தன்னுடன் மூன்று தலைவர்களுடன் கலந்து கொண்டார்.*

*ஜெர்மனி : இந்தக் கூட்டத்தை நடத்தும் நாடு (Host Country) என்பதால் திரு.ஆகஸ்டு பேபெல் (Mr.August Bebel) தலைவர்*

ஜெர்மனி சமூக ஜனநாயகக் கட்சி (Social Democratte Party of Germany) தன்னுடன் 9 பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டார்.

பிரிட்டன் : இந்திய இல்லத் துவக்க விழாவுக்கு முக்கிய தலைவராக அழைக்கப்பட்டு துவக்க விழா சிறப்பு உரையாற்றிய லண்டன் சமூக ஜனநாயக அமைப்பை சார்ந்த திரு.ஹென்றி ஹிண்ட்மேன் (Mr.Henry Hyndman) தலைமையில் மேலும் '3' பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

இத்தாலி : சிறு வயதிலேயே, சர்வாதிகாரி கரிபால்டி எதிர்த்த

சமூக நிதி காப்பாளரும். இத்தாலியின் தலைசிறந்த தலைவருமான திரு.அமில்கேர் சிப்பிரியானி (Mr.Amilcare Cipriani), மற்றொரு முக்கிய தலைவருடன் கலந்து கொண்டார்.

நெதர்லேண்ட் : சார்பாக, புரட்சி வீரர் திரு.H.H.வாண்கோல் (Mr.H.H.Van Kol) கலந்து கொண்டார்.

ரொமான்யா : திரு. அலைக்ஸாண்டரு கான்ஸ்டன்டின்ஸகு (Mr.Alexandru Constantinescu) என்ற 'தொழிலாளர் நல' தலைவர், தன்னுடன் மேலும் 2 பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டார்.

ரஷ்யா : இந்த நாட்டின் சார்பாக திரு.விலாடிமிர் லெனின் (Mr.Vladimir Lenin) தன்னுடன் 2 பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டார். இவர் 10 ஆண்டுகள் கழித்து, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக, ரஷ்யாவை 7 ஆண்டுகளும், அடுத்த 2 ஆண்டுகள் ஒருங்கிணைந்த 'சோவியத் யூனியன்' தலைவராக நல்ஆட்சிப் புரிந்தார்.

அமெரிக்கா : சமூகநல கட்சி சேர்ந்த திரு.பிரங்க்பொன் (Mr.Frank Balrn) தன்னுடன் 6 பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டார்.

இந்தியா : தமது இந்தியாவின் சார்பாக 'காமா அம்மையார் தலைவர் வீரேந்திரநாத் சட்டோபாத்தியா' வுடன் முதல்முறை கலந்து கொண்டு சரித்திர புகழ் பெற்றதை காண்போம்.

1907ஆம் வருடம், ஆகஸ்டு மாதம் 22ஆம் தேதி, அதாவது

*‘ஸ்டட்ஹார்ட்’* **(Stuttgart)** *கூட்டத்தில் நான்காவது நாள், பலருடைய, சொற்பொழிவுகளுக்கிடையே, இந்தியர்கள் சார்பாக, வந்திருக்கும், ‘சீமாட்டி பிகாஜி ருஸ்தம் காமா’* ***(A Lady from India Bhikaji Rustom Cama)*** *என்றழைக்கப்பட்ட. “நமது காமா அம்மையார். சிவந்த மேனியுடன் கருத்த அழகிய கண்களுடன், உடலை எம்பிராய்டரி செய்யப்பட்ட கரைகொண்ட சேலையில் முழுமையாக மறைத்துக் கொண்டதோடு, அந்த சேலையின் தலைப்பு அவருடைய தலையில் கீரிடம்போல் அலங்கரிக்க அனைவரின் முன் தோன்றினார்”. காமா அம்மையாரைப் பற்றி மேலே குறிப்பிட்டுள்ள விளக்கம், அந்த கூட்டத்தின் (Minutes) புத்தகத்தில் ஜெர்மன் மொழியில் பதிவு செய்யப்பட்டுள்ள தமிழாக்கமேயாகும்.*

*இவ்வாறு தோற்றத்தில் பார்வையாளர்களை கவர்ந்தது மட்டுமில்லாமல், தன்னுடைய நுனிநாக்கு, ஆங்கிலத்திலும், ஆங்காங்கே ஜெர்மன் மொழியிலும் மடை திறந்த வெள்ளம்போல், பிரிட்டிஷ் அடக்குமுறை ஆதிக்கத்தையும், அதனால் தன் இந்திய மக்கள் படும் துன்பங்களையும் எடுத்துக்கூறி, அங்கு கூடியிருக்கும் எல்லோரும் “இந்த உலக மக்களில் ஐந்தில் ஒரு பகுதியாக இருக்கும் எங்கள் நாட்டவர்களை அடிமைத் தளையிலிருந்து மீட்க உதவுங்கள்” என்று முடித்து எல்லோர் கவனத்தையும் கவர்ந்தார். (இப்போது தமது மக்கள் தொகை, உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஏழில் ஒரு பகுதியாக இருக்கிறது.)*

*தன்னுடைய சரித்திர புகழ் பெற்ற உரையின் முடிவில் அவர் அந்த கூட்டத்தில் பெருமையுடன் முதன் முதல் அறிமுகப்படுத்திய நமது நாட்டின் மூவர்ணகொடி, பச்சை, காவி, சிகப்பு என்ற வர்ணங்களால் எல்லோரையும் கவர்ந்தது. அதை தொடர்ந்து ‘அவர்’, இதுதான் எங்கள் இந்திய நாட்டின் சுதந்திரக்கொடி. ஆம், இதுவரை எங்கள் இந்திய இளைஞர்களால் வடிக்கப்பட்ட இரத்தத்தால் இந்தக் கொடி பிறந்துவிட்டது. எனவே இங்கு கூடியிருக்கும் எல்லோரும் தயை கூர்ந்து, எழுந்து நின்று இந்த இந்திய சுதந்திரக்கொடியை வணங்குங்கள். அதோடு, இந்த*

*கொடியின் கீழ், சுதந்திரத்தை விரும்பும், நாம் அனைவரும் இந்த உலகில் உள்ள அனைத்து நாட்டு மக்களையும் அடிமைத்தளையிலிருந்து விடுவிப்போம் என்று உறுதி மொழி எடுத்துக்கொள்வோம் என்று கூறி. எல்லோர் கவனத்தையும் ஈர்த்தார். இவ்வாறு, ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அறைகூவி இந்தியாவின் சுதந்திரக் கொடியை அறிமுகப்படுத்தியது உலக மக்கள் எல்லோர் கவனத்தையும் ஈர்த்து அந்த நிகழ்வு சரித்திரப்புகழ் பெற்றது. (தொடரும்)*




---

# ஏமாற்றாதே ஏமாறாதே!



*அருள்நிதி. பகவதி மோதிலால் 9446090272*

***கா**லையில் சமையல் வேலையில் மும்முரமாக இருந்த லீலா, கோவிலுக்கு சென்ற கணவர் ரவீந்திரன் ஸ்கூட்டர் வரும் சப்தத்தைக் கேட்டதும் மனதில் மனுஷன் வந்தவுடன் 'ரெண்டு நாள் சாப்பிடாதது மாதிரி, டிபன் ரெடி ஆச்சா, பசிக்கிறது, மூணு இட்லியை அவிக்கிறதுக்கா இந்தப் பாடு என்று படபடண்ணு நிப்பாரே' என்று இட்லியையும், தேங்காய் சட்னியும் அதற்கு கூட தோசைப் பொடியையும் மேசைமேல் வைத்துவிட்டு "என்னங்க டிபன் எடுத்து வச்சிருக்கேன் வந்து சாப்பிடுங்க" என்று சொன்னாள்.*

*ரவி "நான் நினைச்சுக்கிட்டேதான் வந்தேன் சரி, நல்லா இரு, சரியா எடுத்து வச்சிட்டியே" என்று சொல்லிக்கொண்டே டைனிங் டேபிளில் வந்து அமர்த்து இட்லியை ருசிக்க தொடங்கினான்.*

*லீலா, குடிப்பதற்கு சீரகத் தண்ணீரை கொண்டு வந்து*

*மேஜை மேல் வைத்துவிட்டு "நம்ம சேகருக்கு பெண் பார்க்க வேண்டாமா? அவனுக்கு வயது 28 ஆகிறது. நமக்கும் வயதாகிறது. காலா காலத்தில் அவனுக்கு கல்யாணம் நடத்தி பேத்தி பேரனைப் பார்க்க வேண்டாமா? நடந்ததையே நினைத்துக் கொண்டிருந்தால் ஒன்றுமே நடக்காது" என்றதும்,*

*சமையல் அறையில் நின்ற அவளைத் திரும்பி பார்த்துவிட்டு "எனக்கு ஆசை இல்லாமலில்லை. சொந்தக்காரர்களிடம் சொல்லலாமா? என்றதும் நீ தான் ஐயோ அடுத்தவங்களை நம்பினாலும் சொந்தக்காரர்களை நம்ப முடியாது. நம்ம பையனுக்கு நல்ல வேலை, நல்ல கம்பெனி, பார்க்குறதுக்கும் நல்ல லட்சணமாக இருக்கிறான், சொந்தகாரங்களுக்கு இப்பொழுதே கண்ணை உறுத்திக் கொண்டிருக்கிறது. அதுவும் உங்க சொந்தக்காரங்களுக்கு கொஞ்சமும் பிடிக்காது. நமக்கு தெரிந்த நண்பர்களிடமோ, கல்யாண தகவல் மையத்தில் பதித்து வைப்போம் என்றாய்."*

*"ஆமா நான் சொன்னேன், நீங்க ரெண்டு இடத்தில் போய் பையனுக்கு பெயரை ரெஜிஸ்டர் செய்துவிட்டு வந்தீங்க. ரெண்டு வாரம் ஆச்சு, நீங்க அங்கே போய் பார்த்திங்களா. காரியம் நடக்கணும்ணா நம்ம தான் போகணும். டிபனை சாப்பிட்டுவிட்டு இன்றைக்கு அங்கு போறதுக்குள்ள வழிய பாருங்க" என்றாள்.*

*"ஒரு நாளைக்கு நிம்மதியா வீட்டில் இருப்பதைப் பார்த்தா, உனக்கு பிடிக்காதே, சரி இன்னைக்கு போய்விட்டு வருகிறேன்" என்று புறப்பட்டார்.*

*அருகில் வந்த லீலா மெதுவாக ரவியிடம் "ஜாதி ஒன்றும் பிரச்சனை இல்லை. நல்ல பெண்ணாக இருக்கணும். நமக்கு வயசு காலத்தில் தண்ணீர் தந்தால் போதும்" என்றாள்.*

*"நீ அதை எதிர்பார்க்காதே, அவனை நல்லா பார்த்த போதாதா!. இப்போ உள்ள பெண் பிள்ளைகளை பார்க்கிறோமே, ஒன்றும் எதிர்பார்க்கக்கூடாது. பக்கத்து தெரு சாந்தி அவங்க மகனுக்கு பெண் பார்த்த போது அந்தப் பொண்ணு பையனிடம், 'இந்த இரண்டு லக்கேஜும் நம்ம கூடத்தான் வருமா?' என்று*

கேட்டாளாம். சாந்தியின் பையன் என்னவென்று புரியாமல் முழித்ததும், அவள் 'உங்க அப்பா, அம்மாவைத் தான் சொல்றேன்' என்று சொன்னாளாம். அப்படி இருக்கு காலம். நம்ம கவனமாக இருக்கணும்."

"ஆமாம், நீங்கள் சொல்வது சரிதான் எதிர் வீட்டு ரேணுகா அத்தை, பாவம் அந்த முடியாத காலை வைத்துக்கொண்டு பையனுக்கு டிபன், காப்பிண்ணு எல்லாம் அவங்க தான செய்கிறார்கள். சாயங்காலம் லேட்டா வந்த மருமகள் பானுக்கிட்ட ஏம்மா லேட்டுண்ணு கேட்டது, அவளுக்கு பிடிக்கவில்லை. உடனே முகத்தில் அடித்தது மாதிரி கம்பெனியில் வேலைக்கு போனா அவங்க சொல்ற வேலையை செய்துவிட்டுதான் வர முடியும். மேனேஜர் கிட்ட வீட்டில் மாமியார் இருக்காங்க, நேரம் ஆயிடுச்சின்னா பெரிய பிரச்சினை ஆயிடும் என்று சொல்ல முடியாது. நல்ல சம்பளமும் தந்து, வீட்டிலேயும் கொண்டு விட்டுட்டு வேலை வாங்காமல் விடுவார்களா? நேரம் பார்க்காமல் வேலை செஞ்சாதான் பிரமோஷன் கிடைக்கும். அப்படி சமயத்துக்கு வந்து, வீட்டு வேலையை பார்க்கணும்னா பேசாம ஒரு வேலைக்காரியை கல்யாணம் பண்ணி இருக்கணும். கஷ்டப்பட்டால்தான் முன்னுக்கு வரமுடியும். இங்க என்ன இருக்கு, இந்த வீடு ஒரு பெருங்காயம் டப்பா என்று அடுக்கிக் கொண்டே போனாளாம். ரேணுகா அத்தை தெரியாம கேட்டுட்டுட்டேன் அம்மா, நீயாச்சு, உன் வேலையாச்சு, உன் மனசு போல செய் என்று சொன்னார்களாம். அதனால்தான் நம்ம பையன் கல்யாணம் முடிந்தவுடன் அவனைத் தனிக்குடித்தனம் அனுப்பிவிடலாம் என்று இருக்கிறேன்" என்றதும்

அவர் சிரித்துக்கொண்டே "நீ ஒன்றும் கஷ்டப்பட வேண்டாம், அவங்களே வந்தவுடன் தனிக் குடித்தனம் போய்விடுவார்கள். சரி, நான் போய் கல்யாண தகவல் மையத்திற்கு போய் ஏதாவது பொருத்தமான ஜாதகம் வந்திருக்கான்னு பார்த்திட்டு வருகிறேன்." என்று கிளம்பினார்.

வீட்டுவேலையெல்லாம் முடித்து ரவி வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் கொண்டு வந்த மூன்று ஜாதகமும் போட்டோவும் காண்பித்தார். அதை எல்லாம் பார்த்துவிட்டு மாதவி என்று இருக்கிற இந்த பெண் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறாள்,

*நல்ல கம்பெனியில் வேலை, சம்பளமும் நம்ம பையனை விட கூடுதல்தான். ஒரே பிள்ளை தான், வேற பிரச்சனையும் இல்லை, அப்பா அம்மா மட்டும் தான் இருக்காங்க என்று எழுதி இருக்கு. போனில் பேசலாம் என்று கிடைத்த மொபைல் நம்பரில் அழைத்தாள் லீலா.*

*போன் எடுத்த பெண்ணின் அம்மா உமா,"ஹலோ" என்று கேட்க, விவரங்களை எல்லாம் கேட்டுவிட்டு "நீங்கள் பேசினது எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு பெண் குனிந்த தலையை நிமிர மாட்டாள், நல்ல அடக்கம், வீட்டுவேலைகள் எல்லாம் அவளே பார்த்துக் கொள்வாள், ஹோட்டலில் போய் சாப்பிட பிடிக்காது, ஐ.டி கம்பெனியில் அசிஸ்டன்ட 'மேனேஜர் நீங்க கொஞ்சம் அன்பாக இருந்தால் உங்களை தலையில தூக்கி வச்சு பாடுவாள்" என்று பெருமையாக சொல்ல.*

*இதைக் கேட்ட லீலா மனதில் 'தலையில் தூக்கி வைத்து ஆடவும் வேண்டாம், பிறகு தூக்கிப் போட்டு மிதிக்கவும்வேண்டாம்' என நினைத்துக் கொண்டு."நாங்க நாளைக்கு ஏழு மணிக்கு ஹோட்டல் பிரசாந்துக்கு வருகிறோம் நீங்களும் பெண்ணை அழைத்துக் கொண்டு வாருங்கள் அங்கு இருந்து நிம்மதியாக பேசித் தீர்மானம் எடுக்கலாம்" என்றாள்*

*அடுத்த நாள் லீலாவும் கணவர் ரவியும், மகன் சேகரும் சரியாக மாலை 7 மணிக்கு பிரசாந்த் ஓட்டலுக்கு சென்று ரிசப்ஷன் ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தார்கள். அப்பொழுது அங்கு ஒரு ஆட்டோவில் வந்து இறங்கி, ஹோட்டலுக்குள் நுழைந்த மூன்று பேரும் அங்குமிங்கும் பார்த்ததும் ரவி இவங்களைத்தான் நாம் பார்க்க வந்திருக்கிறோம் என்று மனதில் நினைத்துக்கொண்டு அவர்கள் அருகில் சென்று "சார் நீங்கதானே ராஜமாணிக்கம்" என்றதும்*

*அவர் "ஆமாம் நீங்க தான் ரவீந்திரன் பிள்ளையா" என்று சிரித்துக்கொண்டு கேட்க இருவரும் கைகுலுக்கி விட்டு முன்னே நடக்க பின்னால் மாதவி, அவள் அம்மா உமா, மற்றும 'லீலாவும் நடந்தார்கள். பெண்ணை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டு மனதிற்குள் நல்லாத்தான் இருக்கா, நல்ல சிகப்பு நிறம், அளந்து*

வைத்த மாதிரி உடம்பு, யாருக்கும் பிடிக்காமல் இருக்காது சரி எப்படியாவது பேசி இந்த பெண்ணையே பையனுக்கு முடித்து விட வேண்டும், என்று நினைத்துக் கொண்டு மகனைப் பார்க்க. சேகர் மெதுவாக லீலாவின் அருகில் வந்து,“எனக்கு பிடித்திருக்கிறது, அப்பா எதையாவது பேசி பிரச்சனை வராமல் பார்த்துக்கொள்” என்றான்.

அவர்கள் அந்த ஹோட்டலின் மூன்றாவது மாடியில் உள்ள ரூப் கார்டனுக்கு சென்றதும் வசதியாக ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்து விட்டு நிதானமாக ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து பொதுவாக பேசிக்கொண்டு இருந்தார்கள்.

லீலா, மனதிற்குள் அதிகம் பேசி காரியத்தை கெடுக்க வேண்டாம் என நினைத்து, “வந்த காரியம் நல்லபடியாக முடிஞ்சாச்சு, உங்களுக்கும் பிடிச்சிருக்கு, எங்களுக்கும் பிடிச்சிருக்கு” என்று மகனைப் பார்த்துக்கொண்டே சொல்ல, அவர்கள் எல்லோரும் சிரிக்க, லீலா ரவீந்திரனைப் பார்த்து “என்னங்க, நீங்க ஏதாவது ஸ்வீட்டு கொண்டு வர சொல்லுங்கள்” என்று சொன்னதும் அவர்“ஹலோ”என்று சர்வரை அழைத்து “முதலில் எங்கள் எல்லோருக்கும் பாதாம்கீர் கொண்டு வாப்பா” என்றார். பிறகு அவரவர் விருப்பதிற்கு ஆர்டர் கொடுத்து சாப்பிட்டுவிட்டு புறப்பட்டபோது இரவு ஒன்பது மணி ஆகிவிட்டது.

அடுத்த நாள் ரவீந்திரன் மாதவியின் அப்பாவை போனில் அழைத்து “ஜாதகப்பொருத்தம் பார்த்தாச்சு, வரும் தை மாதம் ஒரு நல்லநாள் பார்த்து நிச்சயம் நடத்தி விட்டால் பிறகு குருவாயூரில் வைத்து திருமணம் முடித்ததும், இங்கு ஒரு ரிசப்ஷன் வைத்தால் போதும்” என்று சொல்ல அவர்களுக்கு பழம் நழுவி பாலில் விழுந்தது மாதிரி இருந்தது. இதை சற்றும் எதிர்பார்க்காத ராஜமாணிக்கம் எங்களுக்கும் சம்மதம் என்று சொன்னால் அவங்க சொன்னதை கேட்பது போல் ஆகும், நமக்கும் கல்யாணச் செலவும் குறையும் என்று மனதில் தீர்மானம் எடுத்துவிட்டு “எதற்கும் வீட்டில் பேசிவிட்டு உங்களை அழைக்கிறேன்” என்று சொல்லி மனைவியிடமும்,மாதவியிடமும் ஒப்புக்கு பேசிவிட்டு ரவியைஅழைத்து “எங்களுக்கும் சம்மதம்” என்றார்.

*இதைக்கேட்ட ரவி "அடுத்த வாரத்திலேயே நமக்கு நிச்சயதாம்பூலம் வைத்துவிடலாம் நான் இன்றைக்கு நாள் பார்த்து சொல்கிறேன். எனக்கு ஆடம்பரம் எல்லாம் பிடிக்காது, அவசியமில்லாமல் ஆட்களை கூப்பிட்டு சாப்பாடு போட்டுவிட்டு அவங்க சொல்லுகிற குற்றத்தையும் கேட்கணும். நாங்க 10பேர் வருவோம். நீங்க பார்த்து செய்யுங்க. நிச்சயதாம்பூலச் செலவு உங்களுடையது, எங்களுக்கு பெரிய சீர் சிறப்பு ஒன்றும் செய்ய வேண்டாம். பையனுக்கு அஞ்சு பவுன்ல ஒரு நல்ல செயினும், ஒரு பவுன்ல ஒரு மோதிரமும் நீங்க போட்டா போதும். நாங்களும் கண்டிப்பா பரிசம் போடுவோம்," என்றார். மொத்தத்தில் இந்த பேரம் பேச்சு லாபமாக பட்டது ரவிக்கு."அடுத்த திங்கட்கிழமை நீங்க நம்ம வீட்டுக்கு வாங்க, நாங்களும் புதன் கிழமை உங்கள் வீட்டில் வந்து மற்ற காரியங்கள் பற்றி பேசலாம்" என்றார்.*

*ஒரு வழியாக நிச்சயதாம்பூலம் சுருக்கமாக முடிந்தது இருவரும் கல்யாணத்தை வரும் தை மாதம் முதல் வாரத்தில் குருவாயூரில் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தனர். .உடனே ரவியும் "எங்களுக்கு தனியா அபிப்ராயம் ஒன்றும் இல்லை. நீங்க கல்யாணம் நடத்துறீங்க. எங்கு வச்சு நடத்தினாலும் நாங்க வந்து விடுவோம்" என்று சொல்லிவிட்டு மனதில் 'நல்லாதாபோச்சு சொந்தக்காரங்க வந்து நின்னு பல்லைக்குத்தி நம்மை கேவலப்படுத்த முடியாது. கைக்காசு போட்டு எந்த சொந்தக்காரன் குருவாயூர் வரப் போறான். வந்தாலும் வினை தான். வராமல் இருப்பது உத்தமம்' என நினைத்துக் கொண்டு "திருமணத்தை குருவாயூரில் நடத்திவிட்டு நீங்கள் இங்கு உள்ளவர்களுக்கு ரிசப்ஷன் வைத்துவிட்டால் போதும்" என்று கூறி ரிசப்ஷனுக்கான முழு செலவையும் பெண் வீட்டார் தலையில் கட்ட திருமணமும் முடிந்தது.*

*புது மாப்பிள்ளையும் பொண்ணும் ஹனிமூனுக்காக சிங்கப்பூருக்கு போகிறோம் என்று அடுத்த நாள் கொச்சி விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்கள்.அன்றிரவே ரவியும், லீலாவும் குரவாயூரிலிருந்து திருவனந்தபுரத்திற்கு குரவாயூர்-சென்னை எக்ஸ்பிரஸில் புறப்பட்டார்கள். ரயிலில் வந்து கொண்டிருந்த*

ரவீந்திரனிடம் லீலா "எப்படியோ பெரிய பிரச்சினை ஒன்றும் இல்லாமல ' பையனுக்கு கல்யாணம் நடந்துவிட்டது.பையனுக்கு முதல் கல்யாணம் தடைபட்டது என்ற செய்தியை அவர்களிடம் மறைத்தது நல்லதாக போச்சு. இல்லேன்னா, அவங்க இவ்வளவு செலவு செய்து கல்யாணம் நடத்தியிருக்க மாட்டாங்க" என்று சொல்ல அதற்கு ரவீந்திரன் "அட அதிபுத்திசாலி அந்தப் பெண்ணுக்கும் முதலில ' நிச்சயதார்த்தம் நடந்து ஆபீஸ்ல ஏதோ என்னமோ கசமுசா காரணம். அந்த கல்யாணம் நின்னு போய் இருக்கு. அதுதான் அவங்களும் நம்ம சொன்னபடி தலையை குலக்கினார்கள். எப்படியோ நாம ஜெயிச்சிட்டோம்" என்றார்.

அதேரயிலில் அடுத்த பொட்டியில் இருந்த ராஜமாணிக்கத்திடம் உமா"எப்படியோ கல்யாணம் நல்லபடியா முடிந்துவிட்டது. நம்ம பொண்ணுக்கு முதல் கல்யாணம் தடைபட்டது அவங்களுக்கு தெரியாது. நானும் அதைச் சொல்லவில்லை, அவங்களுக்கு ரொம்ப தங்கமான மனசு" என்றாள்.

உடனே ராஜமாணிக்கம் "அட மேதாவி அவங்க பையனுக்கு இந்த மாதிரி ஒரு முறை கல்யாணம் தடைப்பட்டுவிட்டது. அந்த கல்யாணம் நின்னுபோன விவரம் எனக்கு தெரியும் ஆனா அவர்கள் எனக்கு இந்த விஷயம் தெரியாது என்றும் என்னை ஏமாற்றி விட்டதாக நினைச்சிட்டு இருக்காங்க எப்படியோ நம்ம ஜெயிச்சுட்டுட்டோம்" என்றார்.

மொத்ததில் இருவருமே ஒருவரை ஒருவர் ஏமாற்றி வெற்றி பெற்றாதாக நினைத்துக் கொண்டார்கள்.




திருமதி சொர்ணலதா நரேந்திரகிரி

***சிறுகதை***

# விடிந்தால்கல்யாணம்



**தேரூர் மு. கோபி**

***தா**ணுகுமாரிக்கு விடிந்தால் கல்யாணம் அவள் பெற்றோர் பார்க்காத வரனில்லை, அலையாத இடமில்லை பதித்து வைக்காத திருமண தகவல் மையமில்லை. வியாழ நோக்கு இருக்குது என்று ஜோசியன் சொன்னாலும் எல்லாவற்றிற்கும் நேரம் காலம் ஒத்து வரவேண்டாமா?!*

*அப்பா பெருமாள்பிள்ளை ஊரில் அத்தனை பேரையும் சொந்தக்காரன் என்பார். தெரிசனங்கோப்பு பகவதிபெருமாள் சொந்தமாக்கும் என யாராவது அவரிடம் சொன்னால் “பகவதிபெருமாள் பெரியப்பாக்கு நீங்க யாரு? என்பார் இப்படி நாஞ்சில் நாட்டில் யாரை சொன்னாலும் பெரியப்பா, சித்தப்பா, மாமன், அண்ணன், தம்பி, அக்கா, தங்கச்சி, மைனி, கொழுந்தி, அத்தை, சித்தி, பெரியம்மை என பசையுள்ள ஒருத்தரையும் விடமாட்டார். அப்படிப்பட்ட பெருமாள்பிள்ளை தன்மகளுக்கு வரனுக்கு வேண்டி அலைந்தார்.*

*ஒருநாள் பால்ய சிநேகிதன் பரமேஸ்வரன் வந்தார். வெகு நாட்களுக்கு பிறகு சந்தித்துக் கொண்ட நண்பர்கள் மனைவி தைலயல்நாயகி அம்மா இருவரிடமும் நண்பனைப் பற்றி புகழ்ந்து சொன்னார் “உன் பெண்ணுக்கு வரன் பார்க்கேன்னு ஒரு வார்த்த ஏன் என் கிட்ட சொல்லலை? ஏன் பய இருக்காம்லாடே? என் மருமகளை போல அவனும் இன்ஜினியரிங் படிச்சிருக்கானே”*

